1989 மே 2]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : உறுப்பினர் அவர்களுடைய அவசரத்தைப் பற்றி எனக்கு நன்கு தெரிகிறது. கேட்க வேண்டியவர்களிடம் கேட்டு இருக்க வேண்டும், ஏன் இவ்வளவு தாமதம் என்று. வந்து மூன்று மாதம் தான் ஆகிறது. நிச்சயமாக உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மைய வேலைகள்

187—(*வினா எண் *445*) திரு. மா. சுந்தரதாஸ், திரு. பொன். விஜயராகவன் திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மையத்தின் வேலைகள் முடிவடைந்துவிட்டதா?

ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மையத்தின் வேலைகள் முழுவதுமாக இன்னும் முற்றுப்பெறவில்லை.

(ஆ) கோயம்பேடு மொத்த வணிக அங்காடி மூன்று பெரிய அங்காடிகளாகக் கட்டப்பட்டு வருகின்றது. பூக்கள், காய்கள், பழங்கள் அங்காடியும், துணி அங்காடியும், நவதானிய அங்காடியும் ஆக, மூன்று அங்காடிகள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தற்போது அந்தப் பகுதியின் அடிப்படை வசதிகளைச் செய்கின்ற அளவில், குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி, மின்சார வசதி, அனைத்தும் தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. பூ மற்றும் காய்கறி அங்காடி 1990 ஆம் ஆண்டுக்குள் நிறைவு பெறும் திட்டமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. துணி மற்றும் தானிய அங்காடி அதனுடைய திட்ட ஆரம்ப நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மொத்த வணிக அங்காடி எப்போது கட்ட ஆரம்பிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் துவக்கப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை, தனி வினா எழுப்பினால் விவரமாக இந்த அவைக்குத் தெரிவிக்கின்றேன்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாகவே இந்தக் கட்டட வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. கால

தாமதம் ஆகிறது என்பதற்காக இதை குறிப்பிடுகிறேன். எவ்வளவு மதிப்பீட்டில் இந்தப் பணி நடக்கப் போகிறது? இதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 40 கோடி ஆகும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அங்காடி கட்டுவதற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தாலும், இதைக் கட்டுவதில் ஆண்டுக் கணக்காக காலதாமதம் ஆகிறது. இன்றைய தினம் விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிற காரணத்தால் அதனுடைய மதிப்பீடு உயராதா? ஆகவே அதை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அங்காடிகள் கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதிலே பல ஆண்டு காலமாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தது. சிலர் நீதிமன்றங்களுக்கு சென்றார்கள். அந்த நீதிமன்றங்களுக்குச் சென்ற வழக்குகள் எல்லாம் இன்றைய தினம் திரும்பப் பெறப்பட்டு, எம். எம். டி. ஏ. அதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு, இப்போது அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அந்த அங்காடிகள் கட்டி முடிக்கப்படும்.

திருப்பூர் அபிவிருத்தித் திட்டம்

188—(*வினா எண் 963)—திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் திருப்பூரில் அபிவிருத்தித் திட்டம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) உலக வங்கி உதவியுடன் ''நகர வளர்ச்சித் திட்டம்'' தமிழ்நாட்டில் 10 நகரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதில் திருப்பூர் நகரமும் அடங்கும். இத் திட்டத்தின் கீழ் வீட்டுமனைத் திட்டம், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், வழிமுறைப்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டம் மற்றும் போக்குவரத்து நிர்வாகம், சாலை அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் அடங்கும்.